**சுருக்கம்**

திட்டங்கள் – மாநில திட்டங்கள் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – 2010–11–ல் திட்டத்தைச் செயல்படுத்துதல் – வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன – அரசு போக்குவரத்து கழகங்களுக்கு புதிய சாதாரண வகை பேநருந்துகளை வாங்குதல் / பேருந்து பராமரிப்புக்கூடம், சுற்றுச் சுவர் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் / பணிமனைகளுக்கு பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்புக்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல் – செயல்படுத்துதல் – கூடுதல் வழிகாட்டு நெறிமுறைகள் – ஒப்புதல் அளித்தது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அதி1) துறை

அரசு ஆணை (1டி) எண். 360 நாள்: 19.07.2010

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (1டி) எண். 292, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நாள் 14.06.2010.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 41928/2010/என்.இ.டி.எம்.2, நாள் 13.07.2010.

* * * * *

**ஆணை:**

படிக்கப்பட்ட அரசாணை 1–ல், 2010–11–ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தினை செயல்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. இவ்வாணையில், ஏனையவற்றிற்கிடையே கீழ்குறிப்பிட்ட பணிகளை வரையறுக்கப்படாத நிதியான ரூ.87.50 இலட்சத்தில் எடுத்துச் செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

(அ) அரசு போக்குவரத்து கழகங்களுக்கு சொந்தமான கழிவு செய்யப்பட்ட பேருந்துகளுக்கு (அரசாணை (நிலை) எண்.2552, போக்குவரத்துத் துறை, நாள் 26.9.91–இல் குறிப்பிட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி கழிவு செய்யப்பட்ட பேருந்துகள்) பதிலாக மட்டும் புதிய சாதாரண வகை பேருந்துகள் வாங்குதல்

(ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச்சுவர் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல்.

(இ) அரசு போக்குவரத்து கழகங்களின் பணிமனைகளுக்கு பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்புக்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல்

2. மேலே படிக்கப்பட்ட இரண்டாவது கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மேற்குறிப்பிடப்பட்ட பணிகளை எடுத்துச் செய்ய விரிவான கூடுதல் வழிகாட்டு நெறிமுறைகளை அனுப்பி அதன்மீது அரசின் ஒப்புதல் கோரியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்றுக் கொள்ளலாமென முடிவு செய்து, மேலே பத்தி (1)–ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயல்படுத்த ஆணையிடுகிறது. இவை மேற்கண்ட பணிகளை செயல்படுத்த கூடுதல் வழிகாட்டு நெறிமுறைகளாக கருதப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள்,
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15. வழியாக)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக).
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள்,
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
பேரூராட்சிகள் ஆணையரகம், சென்னை – 108.
ஆணையர், கருவூலக் கணக்கு, சென்னை – 15.
உறுப்பினர் – செயலாளர், மாநிலத் திட்டக்குழு, சென்னை – 5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை – 108.
மாநில தலைமை கணக்காயர், சென்னை –6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், (தலைமைச் செயலகம்) சென்னை – 9.
சம்பளக்கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 35.
சம்பளக்கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 5.
சம்பளக்கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை – 1.
சம்பளக்கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலகங்கள்,
அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலகம், சென்னை–9.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
அரசு துணைச் செயலாளர், நிதி (வரவு/செலவு) துறை, சென்னை – 9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9.
நிதி (வரவு–செலவு திட்டம் பொது–I, பொதுII /ஊ.வ) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

**அரசாணை (1டி) எண். 360, ஊ.வ.(ம)ஊ.(மா.அ.தி1) துறை, நாள் 19.07.2010.**

**இணைப்பு**

**2010–11–ம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்திற்கு கூடுதல் வழிகாட்டு நெறிமுறைகள்**

(i) **அரசு போக்குவரத்து கழகங்களுக்கு சொந்தமான கழிவு செய்யப்பட்ட பேருந்துகளுக்கு பதிலாக மட்டும் புதிய சாதாரண வகை பேருந்துகள் வாங்குதல்**

1. அரசு போக்குவரத்து கழகங்களுக்கு சொந்தமான கழிவு நீக்கம் செய்யப்பட்ட பேருந்துகளுக்கு பதிலாக மட்டும் புதிய சாதாரணவகை பேருந்துகள் தேவையின் அடிப்படையில் வாங்க சம்மந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் எழுத்துப்பூர்வமாக பரிந்துரைக்க வேண்டும்.
2. சம்மந்தப்பட்ட அரசு போக்குவரத்து கழகத்தின் நிர்வாக இயக்குநர், அரசாணை (நிலை) எண். 2552, போக்குவரத்துத் துறை, நாள் 26.9.1991–ன்படி தொழில் நுட்ப குழுவால் வழங்கப்பட்ட பழைய பேருந்தின் கழிவு நீக்க சான்றிதழுடன் உரிய செயற்குறிப்பினை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்ப வேண்டும்.
3. மாவட்ட ஆட்சியர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அவர்களால் கழிவு நீக்கம் செய்யப்பட்ட பேருந்துகளுக்கு பதிலாக மட்டும் புதிய பேருந்தை வாங்குவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட வேண்டும்.
4. சாலை போக்குவரத்து நிறுவனத் (Institute of Rural Transort)தால் அங்கீகரிக்கப்பட்ட விலை (Rate Contract) அடிப்படையில் சம்மந்தப்பட்ட போக்குவரத்து கழக நிர்வாக இயக்குநர், புதிய பேருந்து அடிச்சட்டத்தினை (chassis) வாங்க வேண்டும். புதிய சாதாரண வகை பேருந்துகளுக்கு, மேற்கூடு கட்டும் பணி (Body Building) சம்மந்தப்பட்ட போக்குவரத்துக் கழக மேற்கூடு கட்டும் பணிமனையில் உரிய விதிமுறைகளை பின்பற்றி மேற்கொள்ள வேண்டும்.
5. பேருந்து அடிச்சட்டம் வாங்கியவுடன், அதற்கான தொகை மற்றும் பேருந்து மேற்கூடு கட்டும் பணிக்கு தேவையான தொகையினை வழங்க அரசு போக்குவரத்து கழக நிர்வாக இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையை கோர வேண்டும். இதனடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்கள் சம்மந்தப்பட்ட போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநருக்கு தொகையை விடுவித்தவுடன், சம்மந்தப்பட்ட போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர், பேருந்து அடிச்சட்டம் வாங்கியதற்கும் பேருந்து மேற்கூடு கட்டும் பணிக்கும் தொகையை வழங்கவேண்டும்.

(ii) <u>அரசு போக்குவரத்து கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச்சுவர் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல்.</u>

1. சம்மந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரின் எழுத்துப்பூர்வமான பரிந்துரையின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்கள் உரிய மதிப்பீடுகளை தயார் செய்ய, சம்மந்தப்பட்ட அரசு போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநரிடம் கோரப்பட வேண்டும். நிர்வாக இயக்குநர், மதிப்பீடுகளை தயார் செய்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் சமர்ப்பிக்க வேண்டும்.
2. மதிப்பீடுகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி), கூர்ந்தாய்வு செய்தும், தல ஆய்வு செய்தும் தனது குறிப்புரையினை வழங்க வேண்டும்.
3. செயற்பொறியாளரின் (ஊரக வளர்ச்சி) குறிப்புரையின் அடிப்படையில், சம்மந்தப்பட்ட அரசு போக்குவரத்து கழக நிர்வாக இயக்குநருக்கு மதிப்பீடுகளுக்கான நிர்வாக அனுமதியினை, மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படவேண்டும். நிர்வாக இயக்குநர் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை செயற்படுத்த வேண்டும்.
4. மாவட்ட ஆட்சியர், மதிப்பீட்டுத் தொகையினை 50 சதவீத நிதியினை நிர்வாக அனுமதி ஆணையுடன் விடுவிக்க வேண்டும். இத்தொகையின் 60 சதவீதத்தை பயன்படுத்தியதும் அரசு போக்குவரத்து கழக நிர்வாக இயக்குநர், எஞ்சிய 50 சதவீதம் நிதியினை கோரப்படுவதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவரால் விடுவிப்பு செய்யவேண்டும்.

(iii) <u>அரசு போக்குவரத்து கழகங்களின் பணிமனைகளுக்கு பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்புக்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல்</u>

1. சம்மந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரின் எழுத்துப்பூர்வமான பரிந்துரையின் அடிப்படையில், அரசு போக்குவரத்து கழகங்களின் பணிமனைகளுக்கு பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்புக்குத் தேவையான உபகரணங்களான வாஷிங்மெஷின், ஏர் கம்ப்ரஸ்சர், ஜெனரேட்டர், வெல்டிங் மெஷின் செட் வாங்குவதற்கு அல்லது இதுபோன்று அவ்வப்போது போக்குவரத்துத் துறை செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டு தெரிவிக்கும் இதரபிற உபகரணங்களை வாங்குவதற்கு மாவட்ட ஆட்சியர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்கள் உரிய மதிப்பீடுகளை தயார் செய்ய, சம்மந்தப்பட்ட அரசு போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநரிடம் தெரிவிக்க வேண்டும். சம்மந்தப்பட்ட

நிர்வாக இயக்குநர், பழுது நீக்கம் செய்வதற்கு தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கான மதிப்பீடுகளை தயார் செய்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

2. மதிப்பீடுகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) கூர்ந்தாய்வு செய்து, மாவட்ட ஆட்சியரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட வேண்டும்.
3. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998–ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி சம்மந்தப்பட்ட அரசு போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் உபகரணங்கள் வாங்க வேண்டும்.
4. உபகரணங்கள் வாங்கப்பட்டப்பின், அரசு போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் மாவட்ட ஆட்சியரிடம் உபகரணங்களுக்கான நிதியினை கோர வேண்டும்.
5. மாவட்ட ஆட்சியர், நிதியினை அரசு போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநருக்கு விடுவிக்க வேண்டும். உபகரணங்களுக்கான தொகை, அரசு போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநரால் சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

பணிகள் திருப்திகரமாக முடிவுற்று விடுவிக்கப்பட்ட தொகை முழுவதுமாக உபயோகப்படுத்தப்பட்ட பின்னர், தமிழ்நாடு மாநில போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் மேலே இனங்கள் (i) (ii) மற்றும் (iii)–ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதமான பணிகளுக்கும் பயனீட்டுச் சான்றிதழை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**//உண்மை நகல்//**

**பிரிவு அலுவலர்.**